பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரேமதூத வருடம் ஐப்பசி மீ 26 உ திங்கட்கிழமை (12 - 11 1990) ஹிஜ்ரி 1410 ற, ஆகிர் 2 கதிர்: 250

# வவுனியா நகருக்கு வெளியே நிவாரண வேலை தடங்கல்

## 820 தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் பெற்றனர்

கொழும்பு, நவ. 12

யாழ். மாவட்டத்தில் வசதிக் கட்டண ஆசிரியர்களாகவும், தொண்டர் ஆசிரியர்களாகவும் சேவையாற்றிய 820 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஏற்கனவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படுகின்றது.

இவர்களில் ஒரு பகுதியினர் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து ஏற்கனவே ஆசிரியர்களாக நியமனம் பெற்றுவிட்டனர். (உ)

## வேலைகளைச் சீராக்க உள்ளூராட்சி ஊழியருக்கு தற்காலிக இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் வேலைகளைச் சீராக்கும் பொருட்டு ஊழியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கும் திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட இருக்கிறது.

போக்குவரத்துப் பிரச்சினையைக் காரணம் காட்டி பெரும்பான்மையான ஊழியர்கள் வேலைக்கு வராமையால் அலுவலக வேலைகள் தாமதமாகின்றன.

அதைத் தொடர்ந்து ஊழியர்களின் இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள உள்ளூராட்சி அலுவலகங்களில் கடமையாற்ற வசதியாக இடமாற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-3)

## மின்சாரம் இடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும்

யாழ்ப்பாணம், நவ 12

யாழ் மாவட்டத்துக்கான நீர் மின்சாரம் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும் எனத் தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்துக்கு நீர் மின்சாரம் வழங்கும் மின் கேபிள்களும், மின்கோபுரமும் மாங்குளம் இராணுவ முகாம் காவல் அரணுக்கு அருகில் கடந்த மாதம் 31ஆம் திகதி சேதமடைந்தது தெரிந்ததே.

இவற்றைத் திருத்த அனுமதி தருமாறு கூட்டுப்படைத் தலைமையகத்திடம் கேட்கப்பட்டிருந்தது.

நேற்றுவரை அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதனாலேயே நீர்மின்சாரம் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-3]

## சார்க் மாநாடு திகதி சந்திரசேகருக்காக மாற்றம்

புதுடில்லி, நவ. 12

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு திட்டமிட்டபடி இம்மாதம் 19 ஆம் திகதி மாலைதீவின் தலைநகரில் ஆரம்பமாகாது என்றும்–

இரண்டு தினங்கள் கழித்தே இம்மாநாடு ஆரம்பமாகும் என்றும் புதுடில்லியில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்தியாவின் புதிய பிரதமர் திரு. சந்திரசேகர் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்குமுகமாகவே இத்திகதி மாற்றம் என்று அறிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 20 ஆம் திகதி பிரதமர் சந்திரசேகர் தனது அரசுக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரும் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர இருப்பது தெரிந்ததே. (இ-எ)

## அறுவர் பலி

தமிழ்நாட்டில் ஈரோடு என்னும் இடத்திற்கு அருகே நேற்று இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் ஆறு பெண் பயணிகள் உயிரிழந்தனர். (ஒ-எ)

## தமிழர்கள் பெருமளவில் பாதிப்பு

வவுனியா, நவம்பர் 12

வவுனியாவில், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதிக்கு வெளியே, நிவாரண வேலைகளைச் செய்வதற்குத் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தொண்டர் நிறுவனங்கள் நகருக்குள்ளேயே தமது நிவாரணப் பணிகள், மற்றும் உதவிகளைச் செய்யவேண்டும் என்று "அவசர நிவாரணக்குழு" தொண்டர் நிறுவனங்களை வற்புறுத்தி வருகிறது.

இதனால் நகருக்கு வெளியே வாழும் பெரும் எண்ணிக்கையான - பாதிக்கப்பட்ட - தமிழ் மக்களுக்கு நிவாரண வேலைகளைச் செய்வதற்கு தொண்டர் நிறுவனங்கள் தயக்கம் காட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் சர்வோதயம், போரூட், றெட்பானா, செஞ்சிலுவைச் சங்கம், கியூடெக் போன்ற அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

வவுனியா இணைப்பதிகாரி கேணல் இரத்நாயக்கா தலைமையில் இயங்கும் "அவசர நிவாரணக் குழு" நிவாரண வேலைகளை நகரப் பகுதிக்குள்ளேயே செய்ய வேண்டும் என்று அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று கடும் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 12

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளை நோக்கிஇராணுவத்தினர்நேற்றுக் காலைமுதல் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல் நேற்றிரவும் தொடர்ந்தது.

ஷெல் வெடித்து அதிரும் சத்தம் யாழ். நகருக்கும் கேட்டது. (ஒ-5)

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ் மாவட்டத்தில் 89ஆம் ஆண்டு ஜி. சீ ஈ (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட மாணவர்களுக்கான பெறுபேறுகள் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

பெறுபேறுகள் தபால் மூலம் உரிய அதிகாரிகளினால் உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சந்திரசேகர் அத்வானியுடன் பேச்சு!

புதுடில்லி, நவ. 12

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிஷன் அத்வானியை, அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

கட்சியின் இன்னொரு தலைவரான அடல்பிஹாரி [illegible] சந்தித்துப் [illegible]

## மன்னார் வங்கி கட்டடத்தில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அருகில் 3 சிப்பாய்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

மன்னார் இலங்கை வங்கிக் கிளைக் கட்டடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முகாம் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் இந்த முகாமுக்கு அருகில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணியில் சிக்கி மூன்று சிப்பாய்கள் காலை இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## விமானம் கடத்துவதற்கு சவர்க்காரம் ஆயுதமானது!

புதுடில்லி, நவ. 12

தாய்லாந்து விமானத்தைக் கடத்திய இரு பர்மியர்கள் நேற்று பயணிகளை விடுவித்த பின்னர் சல்கத்தாவில் இந்திய இராணுவ அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

கடத்தல்காரர்கள் இருவரும் பர்மிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆவர். இவர்கள் நீதிக்கும் உரிமைக்குமான இயக்க உறுப்பினர்களும் ஆவர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கிலிருந்து பர்மா தலைநகர் ரங்கூன் நோக்கி 200 பயணிகளுடன் பறந்து கொண்டிருந்தபோது கடந்த சனிக்கிழமை இந்த விமானம் கடத்தப்பட்டதும்–

பின்னர் அந்த விமானம்

[4ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் பாதிப்புற்றோருக்கு கூடுதல் நிவாரணம் வழங்க செஞ்சிலுவை அதிகாரி உறுதி

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கூடுதல் நிவாரணம் வழங்கவும், நீண்டகால வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவும் உறுதி அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச்சங்க இலங்கைக் குழுத் தலைவர் திரு. நயோகி கொச்காவ நேற்று இவ்வாறு உறுதியளித்தார்.

திரு. நயோகி மற்றும் அதிகாரிகளுடன் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கும் மற்றும் பல அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

### தவறிவிட்டது

அஜித் ஸ்ரிபன் சுராஜ் டேவிற் (சுரேஷ்) சுருவில் வீதி, சரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை என்ற விலாசமுடைய அடையாள அட்டை 9-11-90 இல் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் - சில்லாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் கொடுக்கவும் (14741)

### சமையல்காரர் தேவை

சமையல் வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுடைய சமையல்காரர் தேவை உடன் தொடர்பு கொள்ளவும். சி. கமலானந்தன் 'நில்கந்த' மானிப்பாய். (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்) (14742)

### ரெயிலர் தேவை

நிரந்தரமாக வேலை செய்ய நல்ல பழக்கமுள்ள ஜென்ஸ் ரெயிலர் உடன் தேவை நேரில் வரவும் ஜெயபதிகாம் ரெக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய் அகதிகளாக இடம் பெயர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (14289)

### Neemia உரம்

அதிக விளைச்சலுக்கு உதவிடும் நீமியா உரம் மில்க்வைற் தொழிலகத்தின் ஒரு சாதனை உற்பத்தி கிலோ பைக்கற் ரூபா 5 00 மொத்தமாக வாங்குவோர்க்கு விசேட சகாயவிலை திருநெல்வேலியிலும், இணுவிலிலும் அண்ணா கேப்பிக் கடையில் விற்பனையாகிறது. மில்க்வைற். யாழ்ப்பாணம். (சி/5404)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5 11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [சி/5402]

### டில்க்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது சகல பணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஜுபிலி பசாரில் இயங்கி வந்த சிங்கர் கிளை மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (14723)

### மல்லிகை வெள்ளி விழா மலர்

படிக்கலாம், பாதுகாக்கலாம் பரிசளிக்கலாம், பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பலாம். உள்ளடக்கச் செழுமை மிக்க மலர் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளது வேறு புத்தகங்களும் கிடைக்கும் மல்லிகை 234 B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (14725)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் இருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை, பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

## இன்றுமுதல் கிளினிக்குகள்

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் கிளினிக்குகள் இன்று திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன.

தினமும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், பிற்பகல் 1 மணி முதல் 3 மணிவரையும் கிளினிக்குகள் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## ரஞ்சன் விசாரணைக்கு உத்தரவாம்!

கொழும்பு, நவ. 12

யாழ். போதனா ஆஸ்பத்திரி மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. (ஒ-எ)

## ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

மறு அறிவித்தல் வரை எமது அலுவலகம்

**யாழ்ப்பாணம், 291/1, நாவலர் வீதியில்**

(உதயன் பணிமனைக்கு அருகில்)

தொடர்ந்து இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய வட்டிக் கொடுப்பனவுகள் இப்போது வழங்கப்படுகின்றன.

**அலுவலக நாட்கள்:**

திங்கள் முதல் வெள்ளி வரை

**அலுவலக நேரம்:**

காலை 9 மணி முதல்
நண்பகல் 12 மணி வரை.

- நிர்வாகத்தினர்.

(சி-5405)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்: 29-07-1920

விண்ணில்: 13 10-1990

அமரர்

### வைத்திலிங்கம் பரமலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், யாழ்/மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு)

14-10-1990 இல் நடைபெற்ற ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்து, உதவிகள் பல செய்த அயலவர், நண்பர், உறவினர் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

91, மணல்தரை ஒழுங்கை,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாளத்தில்

## இந்து சமயம் உத்தியோக மதம்

நேபாளத்தின் உத்தியோக அரசியல் சாசனத்தில் இது பதமாக இந்து மதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னர் பிரேந்திரா வெளி பிரகடனம் செய்த புதிய அரசியல் சாசனத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் சாசனம் பல கட்சி அரசியல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது

## ★ போட்டோஸ்ரட் ★

தரமான ✶ போட்டோஸ்ரட்
★ றோணியோ
✶ ஸ்ரென்சில் கட்டிங்
வேலைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**சண்முகம் ரேட்ஸ்,**
65 (185), பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

அத்துடன் பிறப்பு, இறப்பு; திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப்பத்திரங்களையும், மற்றும், தினசரிப் பத்திரிகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். (14738)

## ★ ஜெயா பென்சி கவுஸ் ★

எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

160, நியூமார்க்கெட்
யாழ்ப்பாணம்.

(14744)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் II

**நிபந்தனைகளும் தகைமைகளும்**

1. அ. விண்ணப்பதாரர் 2 வருடங்களுக்கு மேல் யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

   ஆ. சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்

2. கல்வித்தகைமை

   கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

   அல்லது

   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழிற்துறை ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

   அல்லது

   கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழிற்துறை ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

3, வயது:- 25 — 45

4, சம்பளம்:- கூ வே ஆணைக்குழு சம்பளத்திட்டம் இல. 9
1105/- — 2175/-
60x4 — 75x11 அத்துடன் கூ. வே: ஆணைக்குழு அங்கீகரிக்கும் படிகளும்
(புதிய ஆணைத் திட்டத்திற்கேற்ப சம்பளம் மீள பரிசீலனை செய்யப்படும்)

5. விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச்சான்றிதழ், தொழிற் தகைமைச் சான்றிதழ், வசிப்பிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு 24-11-90க்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. ச.

சாவகச்சேரி.
07 - 11 - 90

[சி-5400]

# உதயன்

## கோலம் குலையாது

வடக்கையும் கிழக்கையும் எந்த வகையிலும் ஒன்றாக இணைப்பதை வன்மையாக எதிர்ப்பதாக பௌத்த குருமார், பௌத்த சங்கங்களின் சார்பில் ஜனாதிபதியிடம் எழுத்துச் சொல்லப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைவதற்குக் கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல், நாடு முழுவதிலும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் குறிப்பிட்ட பௌத்த குருமார் - பௌத்தர்கள் குழு கேட்டிருக்கிறது.

பிரஸ்தாப குழு கையளித்த மிக நீண்ட மகஜரின் கருப்பொருள் தமிழரின் தாயகக் கோட்பாட்டை சிங்களவர்களால் - பௌத்தர்களால்-ஏற்றுக் கொள்ள முடியாது என்பது தான். வடக்கும் - கிழக்கும் தமது தாயகம் என்ற நிலையிலோ அல்லது ஒரு தமிழ் மொழிப் பிராந்தியம் என்றோ தமிழர்கள் உரிமை கொண்டாட அனுமதிக்கலாகாது என்பதற்குச் சாதகமாகப் பல விதண்டாவாதங்கள் மகஜரில் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒற்றையாட்சி என்ற கோட்டுக்குள் வைத்துத் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு எந்த அரசியல் உரிமைகளையும் வழங்கக் கூடாது. இலங்கை முழுவதும் ஒரு சிங்கள-பௌத்த நாடாக்கப்பட வேண்டும். இந்த மூன்று நோக்கங்களும் அந்த மகஜரில் இருந்து தெளிவாகப் புலனாகின்றன. மொத்தத்தில் சிங்களப் பேரினவாதம் அங்கு மிடுக்குடன் ஆக்ரோ பிறப்பிக்கிறது!

இலங்கை பல மொழி, பல மத, பல கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழும் நாடு. தேசிய ஒருமைப்பாடு பேணப்படவேண்டும். சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். சகலரும் சகோதரத்துவ சக வாழ்வு வாழப் பழகிக் கொண்டு ஏனையவர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும், — இவ்வாறு மேனி மினுக்காக பேசப்படுவதினதும் எழுதப்படுவதினதும் உட்கரு மேற் கூறிய மூன்று நோக்கங்களுமே என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுடன், இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைச் சிங்களவர்கள் முன் வைப்பார்கள் என்றோ நியாயத் தீர்வு எதற்கும் இணங்குவார்கள் என்றோ கற்பனையும் செய்ய முடியாது!

சிங்கள-பௌத்த பேரினவாதம் தென்னிலங்கை அரசியலை விட்டுப் பிரியும் எந்த வாய்ப்பும் இல்லை. பௌத்த குழுவின் மகஜரின் தாக்கம் விளைவு நாடாளுமன்றத்தில் காணி அமைச்சர் மூலமாக பிரதிபலித்திருப்பதைப் பார்க்கவில்லையா? வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காதாம்!

தமிழர்கள் போராடாமல் உரிமை பெற முடியாது. சர்வதேச அபிப்பிராயத்தை உண்டாக்கி, அதன் மூலம் நெருக்குதல் கொடுக்காமல் சுயாட்சி உரிமையைக் கூட எதிர்பார்க்க முடியாது. இதனையே பௌத்த குழுவின் அறிக்கை அழுத்திச் சொல்கிறது!

# உணவு முத்திரைக்கான விநியோகம் கடந்த 5 மாதங்களாக இல்லை

## வசதி குறைந்தோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ் மாவட்டத்தில் உணவு முத்திரைக்கான விநியோகம் கடந்த ஐந்து மாதங்களாக மேற்கொள்ளப்படவில்லை. இதனால் உணவு முத்திரை வைத்திருப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ப. நோ. கூ. சங்கங்களே உணவு முத்திரைக்கான விநியோகத்தை மாத முடிவுக்குள் மேற்கொள்ளும். அதன் பின் அந்த முத்திரைகளை உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து யாழ். செயலக சமூக சேவைப் பகுதியிடம் கொடுப்பனவுகளைப் பெறும்.

தற்சமயம் ப. நோ. கூ. சங்கங்களில் உணவுப் பொருள்களும் இல்லை பணமும் இல்லை காசோலைகள் மட்டுமே உள்ளன.

இதனால் உணவு முத்திரைக்கான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் உள்ளதாக ப. நோ. கூ. சங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உணவு முத்திரை விநியோகத்துக்காக ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்க தேவையான நிதி செயலகத்துக்கு வந்துள்ளது.

இந்த நிதியைக் காசோலையாகத் தராமல், பணமாகத் தந்தால் மட்டுமே உணவு முத்திரைக்கான விநியோகத்தை ஆரம்பிக்கலாம் என்று ப. நோ. கூ. சங்க அதிகாரிகள் செயலக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். (இ-3-5)

## ப. நோ. கூ. சங்க உணவுப்பொருள் கடற்படையிடம்?

யாழ்ப்பாணம், நவ. 12

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனலைதீவுக் கிளைக்கு அனுப்பிய சுமார் ஒரு லட்சத்து 27ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் என்னவாயின என்பது தெரியாமல் சங்க நிர்வாகிகள் திண்டாடுகிறார்கள்.

இம் மாதம் நான்காம் திகதி இரவு தனியார் படகு ஒன்றின் மூலம் அரிசி, தேங்காய் எண்ணெய் லக்ஸ்பிறே உட்பட பல உணவுப் பொருள்கள் அனலைதீவுக் கிளைக்கு அனுப்பப்பட்டன.

ஆனால் அந்தப் பொருள்கள் அங்கு போய்ச் சேரவில்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினத்தில் அனலைதீவுக்கும், எழுவைதீவுக்கும் சென்ற இரு படகுகள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, சுற்றி வளைத்துக் கைப்பற்றியதாக செய்திகள் வெளி வந்தது தெரிந்ததே.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட அனலைதீவுப் படகு ப. நோ. கூ. ச. உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற படகாகவே இருக்கும் என்ற சந்தேகம் இப்போது வலுவடைந்திருப்பதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## குறுகிய கால பாடத்திட்ட கருத்தரங்கு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ் மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான குறுகிய கால பாடத்திட்ட கருத்தரங்குகள் இன்று 12 ஆம் திகதி முதல் நடை பெற உள்ளன.

இன்றைய கருத்தரங்கு பற்றிய விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

நாளை 13 ஆம் திகதி கருத்தரங்கு நடைபெறும் பாடங்கள், பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**கணிதம்**

வேலாயுதம் ம. வி., திருக்குடும்ப கன்னியர் மடம், வரணி ம. வி. புங்குடுதீவு ம. வி.

**விஞ்ஞானம்**

மானிப்பாய் இந்து, புத்தூர் சோமாஸ்கந்தா, அளவெட்டி அருணோதயா, ஸ்கந்தவரோதயா, வேலாயுதம் ம. வி., திருக்குடும்ப கன்னியர்மடம், வரணி ம. வி., புங்குடுதீவு ம. வி.

**சமூகக்கல்வி**

அளவெட்டி அருணோதயா ஸ்கந்தவரோதயா, நெல்லியடி ம.வி., யாழ் இந்து மகளிர், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

**தமிழ்**

புங்குடுதீவு ம. வி., வரணி ம. வி., வேலாயுதம் ம. வி., உசன் ம. வி., பண்டத்தரிப்பு மகளிர் வித்தி. சவகச்சேரி இந்து.

14ஆம் திகதிய கருத்தரங்கு விபரம் வருமாறு:

**கணிதம்**

உசன் இராமநாதன் வித்தியாலயம்.

**விஞ்ஞானம்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, உசன் ராமநாதன் வித்தியாலயம்.

**தமிழ்**

சழிபுரம் விக்டோரியா, அளவெட்டி அருணோதயா ஸ்கந்தவரோதயா, நெல்லியடி ம ம.வி., யாழ் இந்து மகளிர், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி. (இ-6)

## பகிஷ்கரிப்பு

புதுடில்லி, நவ. 12

இந்தியாவின் புதிய பிரதமர் பதவியேற்பு வைபவத்தை பாரதீய ஜனதாக் கட்சியும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் பகிஷ்கரித்தன. (ஓ-எ)

## கூட்டுறவுத் திணைக்கள ஊழியர் பலருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த பல உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவுத் திணைக்களத்தின் அபிவிருத்தி, கணக்காய்வு, பனம்பொருள், எழுதுவினைஞர் சேவை உத்தியோகத்தர்கள், கூட்டுறவுப் பரிசோதகர்கள் ஆகியோருக்கே இடமாற்றம் வழங்கப்பட இருப்பதாக அறிய வருகிறது.

இது சம்பந்தமாக வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால், யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவிஆணையாளருக்கு சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 1991ஆம் ஆண்டு முதல் இடமாற்றம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும்— கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் சேவைக் கால விவரங்களை உடன் அனுப்பிவைக்குமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## ஓய்வூதியர்கள் கஷ்ட நிலை

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் ஜூலை மாத ஓய்வூதியத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான கட்டளைகள் கிடைக்கப் பெற்ற போதிலும், இவர்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகள் காலவதியாகி விட்டன.

இது சம்பந்தமாக வங்கி அதிகாரிகள், யாழ் அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளனர். (இ-6)

## மன்னார் பால் சபையின் இரு குளிரூட்டிகள் சேதம்

மன்னார், நவ. 12

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் மன்னார் நகரப் பகுதியில் பாற் சபைக்கு சொந்தமான இரண்டு பால் சேகரித்து வைக்கும் குளிரூட்டிகள் முற்றாக சேதமடைந்தன.

இவை இரண்டிலும் 5000 லீற்றர் பாலை சேகரித்து வைத்து பாதுகாக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் அடிக்கடி இடம் பெறும் ஷெல் தாக்குதல்களினால் பால் சபை கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்து வருகிறது. (இ-72)

## பிரேமா வாழ்த்து

புதிய இந்தியப் பிரதமர் சந்திரசேகருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா அனுப்பி வைத்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இருந்துவரும் நட்புறவு [illegible] அவர் அந்தச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ஓ-எ-5)

## வலி. வடக்கு ஓய்வூதியரின் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், நவ. 12

வலி - வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஓய்வூதியர்கள் தமது வவுச்சர்களை துர்க்காபுரத்தில் இயங்கும் தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களின் வவுச்சர்களை கச்சேரியில் இன்றும் நாளையும் பெறலாம். (ஒ-3)

## இன்றைய எழுச்சி விழா

யாழ்ப்பாணம் நவ 12

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று [திங்கள்] பிற்பகல் 2 மணிக்கு எழுச்சி விழா நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் பிரமுகர்களான திரு பசீர், செல்வி சித்திரா மற்றும் கல்வி அதிகாரி திரு ச. சுப்பிரமணியம் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்வர். (ஓ)

## இன்று நடக்கும் நினைவு பேருரை

பொருளியலாளர் அமரர் கிருஷ்ணானந்தன் நினைவாக இன்று [திங்கள்] பிற்பகல் 2 30 மணியளவில் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரையும், புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் வி. நித்தியானந்தன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். தொடர்ந்து "பொருளிதழ்" புத்தக வெளியீட்டு விழா இடம் பெறும் (ஓ)

## மினிபஸ் சங்க கூட்டம்

வட பிராந்திய மினி பஸ் சேவை சங்க பஞ்சாயத்துச் சபைகள் ஆகியவற்றின் தலைவர்கள், உபதலைவர், செயலாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் முத்திரைச் சந்தை காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

தமிழீழ மாவீரர் தினவிழா மற்றும் தற்போதையபோக்குவரத்து விடயமாக கூட்டத்தில் கலந்துரையாட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## தொழில் நுட்ப மாணவர் கலந்துரையாடல்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவ மன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

வகுப்புகளை மீள ஆரம்பித்தல் பற்றியும் மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும். (இ 6)

## ஸியா மகன் அமைச்சரானார்

இஸ்லாமபாத், நவ. 11

விமான விபத்தில் கொல்லப்பட்ட ஜனாதிபதி ஸியா-உல்-ஹக்கின் புதல்வர் ஏஜாஸ் ஹக் பாகிஸ்தான் அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

## சீனாவின் சனத்தொகை 113 கோடி

பீகிங், நவ 11

சீனாவின் சனத்தொகை கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி அன்று 113 கோடி 40 லட்சமாக இருந்தது.

நான்காவது சனத்தொகைக் கணக்கெடுப்பின் போது இது தெரிய வந்ததாக பீகிங் அரசு அறிவித்தது.

ஒரு நிமிடத்துக்கு 30 குழந்தைகள் பிறக்கின்றன என்றும் அந்தக் கணக்கெடுப்பில் தெரிய வந்தது.

1980 இல் சீன அரசு கொண்டு வந்த "குடும்பத்துக்கு ஒரு குழந்தை" திட்டத்தை பெரும்பாலானவர்கள் கடைப்பிடிக்கவில்லை என்று ஆய்வில் தெரியவந்திருக்கிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் தினத்தை ஒட்டி ப. நோ. கூ. ச. சலுகை

யாழ்ப்பாணம், நவ. 12

மாவீரர் தினத்தை முன்னிட்டு மறைந்த போராளிகளின் குடும்பங்களுக்கு யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் பல சலுகைகளை வழங்க இருக்கின்றன.

ஒவ்வொரு சங்கமும் தனது எல்லைப் பரப்பினுள், முழுநேர உறுப்பினர்களாகஇருந்து மறைந்த மாவீரர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவியை வழங்கும்.

இதில் ஒரு கட்டமாக சங்க எல்லைப் பரப்பில் தெரிவு செய்யப்பட்ட போராளி ஒருவரின் குடும்ப உறுப்பினரின் கல்விச் செலவுக்கென 250 ரூபாவை மாதாந்தம் நன்கொடையாகசங்கங்கள் வழங்கும். இந்த உதவித் தொகை 5 வருடங்களுக்கு தொடர்ச்சியாகவழங்கப்படும்.

அடுத்த கட்டமாக மாவீரர்களின்குடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கு, ப நோ.கூ சங்கங்களில் வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து, கல்வித் தகைமையை கருத்தில் கொண்டு வேலை வாய்ப்பும் வழங்கப்பட இருக்கிறது. [இ-6]

## தேங்காய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 12

குடாநாட்டில் தேங்காயின் விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இயக்கச்சி, பூநகரி, கிராஞ்சி ஆகிய பகுதிகளில இருந்து பெருமளவில் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்தே விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-6]

# இந்திய நாடாளுமன்றம் வெள்ளி கூடும்

புதுடில்லி, நவ. 12

இந்திய நாடாளுமன்றம் இம்மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அழைக்கப்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் பிரதமர் சந்திரசேகர் நம்பிக்கை கோரும் பிரேரணையைச் சமர்ப்பிப்பார் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு இடையில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி திரு சந்திரசேகரை ஜனாதிபதி கேட்டிருப்பது தெரிந்ததே. [ஓ-எ]

## செஞ்சிலுவை புதிய தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 12

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதிகள் அணித் தலைவராக செல்வி அன்ரொநெற் இன்று முதல் பணிபுரிவார்.

இதுகாலவரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதிகள் அணித் தலைவராக இருந்த திரு. ஜோர்ஜ் பற்றசன் தமது பணியை முடித்துக் கொண்டு இன்று கொழும்பு செல்கிறார். [ஓ-5]

## வடமராட்சியில் மாவீரர் வார கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 12

வடமராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் ம. வி. மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இதேசமயம் —

வடமராட்சி தனியார் கல்வி நிலைய பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலும் நாளை காலை 11 மணிக்கு அதேமண்டபத்தில் இ ... ம பெறஉள்ளது.

இக்கலந்துரையாடல்களில் மாவீரர் வாரம் சம்பந்தமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## வர்த்தக பாட ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 12

குடாநாட்டு பாடசாலைகளில் ஆண்டு 9, 10, 11 ஆகிய வகுப்புகளில் வர்த்தகமும் கணக்கியலையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கோட்ட வாரியாக எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் கருத்தரங்கு நடைபெற உள்ளது.

திகதியும் கோட்டமும் பாடசாலைகளும் வருமாறு:-

**15 ஆம் திகதி**

பண்டத்தரிப்புக் கோட்டம்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வடமராட்சி கோட்டம்- அல்வாய் சின்னத்தம்பி ம வி.

**16 ஆம் திகதி**

தென்மராட்சிக் கோட்டம்- சாவகச்சேரி றிபேக் கல்லூரி, வேலணைக் கோட்டம்- சேர் துரைசுவாமி ம ம வி.

**17 ஆம் திகதி**

யாழ்ப்பாணக் கோட்டம்- வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

**19 ஆம் திகதி**

மருதனார்மடம் கோட்டம்- [illegible] இ[illegible] கல்லூரி. (ஓ)

# ஜி. சீ. ஈ. பரீட்சைக்கு விண்ணப்பம் திரட்ட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 12

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பங்களை யாழ். கல்வித் திணைக்களம் திரட்ட உள்ளது.

பல சிரமங்களின் மத்தியில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த வடமாநிலக் கல்விப் பணிப்பாளர், அதிபர்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

இதுவரை விண்ணப்பிக்காத அதிபர்கள் உடனடியாகப் படிவங்களைப் பூர்த்திசெய்து நாளை (செவ்வாய்க்கிழமை) 12 மணிக்கு முன்னர் யாழ். கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

விண்ணப்பப் படிவங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாத அதிபர்கள், யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

# பதிவுத் தபால்களை இங்கு எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டத்துக்கான பதிவுத் தபால்களும் கப்பல் மூலம் கொண்டுவரப்படவுள்ளன.

வடபகுதிக்குரிய பெரும் எண்ணிக்கையான பதிவுத் தபால்களும், பார்சல்களும் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாண அத்தியட்சகர் கொழும்பில் மேற்கொண்ட முயற்சியை அடுத்தே பதிவுத் தபால்களும் பார்சல்களும் கப்பல் மூலம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-3]

## கிரனேட் வீச்சுக்கு கான்ஸ்டபிள் பலி

யாழ்ப்பாணம், நவ. 12

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பு பாலத்தடியில் பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிரனேட் வீச்சுத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிர்ப்பந்தித்து வருகிறது.

வவுனியாவில் கடந்த ஜூன் மாதம் படையினர் நடத்திய தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நகரத்துக்கு வெளியே நெடுங்கேணி, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே உள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க விதிக்கப்பட்ட ''தடை''யால் அப்பகுதியில் நிவாரண வேலைகளை மேற்கொள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தயக்கம் காட்டுகின்றன. (அ-5-6)

## சலப்பையாறில் சிப்பாய் பலி!

திருகோணமலை மாவட்டம் சலப்பையாறில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

## விமானம் கடத்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கல்கத்தா விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதும் தெரிந்தவையே;

சவர்க்காரத்தை ஆயுதமாகக் காட்டிப் பயமுறுத்தியே விமானம் கடத்தப்பட்டதாக விசாரணையின்போது தெரியவந்தது.

கடத்தல் காரர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்—

பர்மாவில் நடந்து வரும் இராணுவ ஆட்சிக்கு எதிராக சர்வதேசத்தை ஈர்ப்பதற்காகவே தாங்கள் இந்த கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்தனர்.

இதனிடையில், கடத்தல் காரர்கள் இந்தியாவில் தஞ்சம் கோரியுள்ளனர் என்றும்- அவர்களை இந்திய அதிகாரிகள் திருப்பி அனுப்ப மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. [ஓ-5]

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி அமிர்தலிங்கம்

(கட்டட ஒப்பந்தக்காரர்)

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்த பெரியதம்பி அமிர்தலிங்கம் அவர்கள் 10-11-1990 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், குலரட்ணம் [இளைப்பாறிய விமானப் படை அதிகாரி], தருமகுலசிங்கம் [புடவைத் தொழில் நுட்ப ஆலோசகர், சிறீராம்ஸ் ராச் பிறதர்ஸ், இளவாலை], கனகேந்திரன் [நோர்வே], பூலோகவதி, வரதஞானகி, சற்குணதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுரு [இளைப்பாறிய பொலீஸ் சார்ஜண்ட்], லீலானந்தம் [மக்கள் வங்கி பிரதம முகாமையாளர், மட்டக்களப்பு], சிவலோகநாதன் [புகையிரதச் சாரதி, காங்கேசன்துறை), அன்புசடாச்சரி, ஸ்ரீஜெயப்பிரபா, சுசீலா ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற திருமதி இராசமணி முருகேசு, திருமதி குருகுலம் சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 10-11-90இல் நடைபெற்று பூதவுடல் கொற்கைதுறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

அ. குலரட்ணம்

வட்டுக்கோட்டை [14743]

## செல்லையா துரைரத்தினம் (துரை)

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைச் சேர்ந்த துரைரத்தினம் அவர்கள் 09 - 11 - 90 அன்று அகால மரணமானார்.

இவர் பராசக்தியின் அருமைக் கணவரும், சசிகலா, சுபாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மோகனதாஸ் (ஆசிரியர்-கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09 - 11 - 90 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.

[சி-5407]

## பெரியதம்பி இலட்சுமணபிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரியாலையில் வசித்தவரும், ஓய்வுபெற்ற மயிலிட்டி வைத்திய சாலை மேற்பார்வையாளருமான பெரியதம்பி இலட்சுமணபிள்ளை காலமானார்.

இவர் வரதலட்சுமியின் அன்புக் கணவரும், கிருபாகரன், வசந்தி வனஜா, ரேணுகா ஆகியோரின் தந்தையும், சத்தியதேவி [ஆசிரியை, சிறிஸ்கந்த வித்தியாசாலை, நெடுந்தீவு], சிவகுமார், கண்ணன் ஆகியோரின் மாமனாரும், சரண்யாவின் பேரனும் ஆவார். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

யாழ்ப்பாணம் (14747) க. தயா

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா தம்பித்துரை

சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தம்பித்துரை அவர்கள் 11-11-90 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. கனகரத்தினம் தம்பித்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி, கணேசன், நடராசா (ஸ்ரீ சாயி ஜுவலர்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்), லீலாவதி, சபாரத்தினம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைசிங்கம், நவமணி, இராஜேஸ்வரி, சரஸ்வதிதேவி, இரத்தினம், விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெபபரசிங்கம், ஜெயசேகரசிங்கம் (காந்தி), ஜெயராஜசிங்கம் (சந்திரன்), ஜெயபூபதி, ஜெயரஞ்சிதம், சசிகலா, சசிரேகா, சுபசாயினி, அருள்வாணி, டர்சிணி, சிந்துரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 12-11-90 திங்கட்கிழமை மு ப. 11·00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

த. நடராசா (மகன்)

(ஸ்ரீ சாயி ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்)

77, பிரதான வீதி,
சங்கானை. (14290)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/[illegible] தில் உள்ள அச்சகத்தில் 12 - 11 - 1990 இல் அ[illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org